# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC 477/2019 | Age : 60 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW-2/PW- 2 | Religion : |
| Name : குணசேகரன் கிராம அலுவலர் | |
| Father's/Husband's Name : சக்கரபாணி | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 26.11..2025.**

சாட்சியை திருவிடைமருதுர் தலைமை காவலர் திரு. வீரபாண்டி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் கள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 பிரிவில் மனு கொடுக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் 58 உமா மகேஸ்வரபுரத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 08.08.2015 ம் தேதி 58 உமாமகேஷ்வரம்புரம் கிராம உதவியாளராக பணிபுரிந்தபோது நள்ளிரவு 12.30 மணியளவில் கீழபுளியம்பேட்டை கிராமத்திலிருந்து கிராம வாசிகள் எனக்கு போன் செய்து மேற்படி கிராமத்திலிருந்து 2 நபர்கள் டிராக்டரில் சவுட்டு மண் எடுப்பதாக கூறினார்கள். உடனே நான் கிராம நிர்வாக

அலுவலராக அ.சா.1 க்கு போன் செய்து மேற்படி தகவலை கூறினேன். உடனே நானும் அசா.1 ம், சம்பவ இடத்துக்கு சென்றபோது எங்களுக்கு எதிரே டிராக்டரில் சவுட்டு மணலை ஏற்றி கொண்டு வந்தார்கள். அவர்கள் எங்களை பார்த்ததும் வண்டியை அந்த இடத்திலேயே விட்டு விட்டு சென்று விட்டார்கள் . மேற்டி டிராக்டரில் வண்டி எண் எதுவும் இல்லாமல் புது வண்டியாக இருந்தது. உடனடியாக அ.சா.1 திருவிடைமருதூர் காவல் நிலையத்திற்கு தகவல் கூறினார். அ.சா.1 என்னிடம் மேற்டிப டிராக்டரை ஒப்படைத்து விட்டு அவர் அலுவலக பணிக்கு சென்று விட்டார். பின்னர் அ.சா.1 காவல் நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்து புகார் அளித்தார். டிராக்டரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். போலீசார் வழக்கு பதிவு செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்தாகள். மாலை சுமார் 4 மணியளவில் சிவகுமார் அளித்த வாக்குமூலத்தில் நானும், அ.சா.1ம் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மேற்படி டிராக்டரில் சவுட்டு மண் எடுத்த நபர்கள் செல்வகுமார், சிவகுமார் என்பதை தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரைக்கும் கிராம உதவியாளராக பணிபுரிந்தேன் என்றால் நான் பணியில் சேர்ந்தது முதல் ஓய்வு பெற்ற வரை 58 உமாமகேஷ்வரம்புரம் கிராம உதவியாளராக பணிபுரிந்தேன். வழக்கு சம்மந்தமாக யார் தகவல் சொன்னார் என்றால் 58 உமாமகேஷ்வரம்புரம் கிராம வாசிகள் தகவல் கூறினார்கள். உங்கள் மேல் அதிகாரிக்கு வழக்கு சம்பவம் குறித்து தகவல் கூறீர்களா என்றால் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல்

கூறினேன். எனக்கு கீழபுளியம்பேட்டை ஊர்காரர்கள் போன் மூலம் தகவல் கூறியதை நான் அ.சா.1 யிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. அ.சா.1 எனது மேல் அதிகாரி என்பதால் அ.சா.1 கொடுத்த பொய் புகார் மனுவிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது எ ன்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்(FAC).**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC 477/2019 | Age : 39 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Religion : |
| Name : ஹரிஹரன் கிராம நிர்வாக அலுவலர் | |
| Father's/Husband's Name : சீனிவாசன் | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 26.11..2025.**

சாட்சியை திருவிடைமருதுர் தலைமை காவலர் திரு. வீரபாண்டி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் கள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 பிரிவில் மனு கொடுக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது 43 சூரியமுனை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08.08.2015 ம் தேதி திருவிடைமருதுர் மகாதானபுரம் கிராம நிர்வாக அலுவலரர் கூடுதல் பொறுப்பாக 58 உமாமகேஷ்வரம்புரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது நள்ளிரவு 12, 1 மணியளவில் கிராம உதவியாளர் குணசேகரன் எனக்கு போன் செய்து மணமேட்டு தெருவில் டிராக்டர் டிப்பரில் சவுட்டு மணல் எடுப்பதாக

என்னிடம் தகவல் கூறினார். உடனே நான் , குணசேகரனை அழைத்துக்கொண்டு சம்பவ இடத்துக்கு சென்று பார்த்தபோது மணல்மேட்டு தெரு மயானபுரம் என்ற இடத்தில் மகேந்திரா டிராக்டரில் எதிரிகள் சவுட்டு மணலை ஏற்றி கொண்டு வந்தார்கள். அவர்கள் என்னை பார்த்ததும் வண்டியை அந்த இடத்திலேயே சென்று விட்டார்கள் . மேற்டிப டிராக்டரில் வண்டி எண் எதுவும் இல்லாமல் புது வண்டியாக இருந்தது. உடனடியாக நான்திருவிடைமருதூர் காவல் நிலையத்திற்கு தகவல் கூறினேன். நான் கிராம உதவியாளர் குணசேரகனிடம் மேற்டிப டிராக்டரை ஒப்படைத்து விட்டு நான் அலுவலக பணிக்கு சென்று விட்டேன். பின்னர் மதியம் 3.00 மணியளவில் காவல் நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்து புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றதில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகா ் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** டிராக்டரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். போலீசார் வழக்கு பதிவு செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்தாகள். மாலை சுமார் 4 மணியளவில் சிவகுமார் அளித்த வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளர் குணசேகரனும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**</u>

எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரைக்கும் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் 2015 ஏப்ரல் மாதத்திலிருந்து 2016 ஜுலை மாதம் வரைக்கும் கூடுதல் பொறுப்பாக 58 உமாமகேஷ்வரம்புரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். கிராம நிர்வாக அலுவலரின் தினசரி நடவடிக்கை குறித்து நாட்குறிப்பு உண்டா என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமாக யார் தகவல் சொன்னார் என்றால் கிராம உதவியாளர் குணசேகரன் கூறினார் . உங்கள் மேல் அதிகாரிக்கு வழக்கு சம்பவம குறித்து தகவல்

கூறீர்களான என்றால் கூறினேன். உங்கள் மேல் அதிகாரிகள் இந்த வழக்கு சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை, வழக்கு பதிய சொன்னார்கள். மேல் அதிகாரிகளுக்கு கொடுத்த தகவலை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொன்ன நாள் நேரத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீது பொய்யான புகார் அளித்துவிட்டு அதனை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்(FAC).**